**கவனிக்க.-** *17.10.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III), *பகுதி* II *மற்றும் பகுதி* III *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1834 - 2013 ඔක්තෝබර් මස 25 වැනි සිකුරාදා - 2013.10.25

*1834 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1454 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1461 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1465 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) அரச ஊழியர் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஶ்ரீ லங்கா செத் சேவா மன்றம் (கூட்டிணைத்தல் ) சட்டமூலம் 2013, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2013, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2013, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கை புகையிரத சேவைகள்**

*2,000 எண்ணிக்கையான புகையிரதப் பெட்டி கூரை மின்விசிறிகளை கொள்வனவு செய்தல்*

பெறுகை இலக்கம் : SRS/F. 7084

கொழும்பு, தபால் பெட்டி இல. 355, இலங்கை புகையிரத சேவைகள் தலைமையகத்தின் திணைக்களக் கொள்வனவுக் குழுவின் தவிசாளர், இலங்கைப் புகையிரத சேவைக்கு 2,000 எண்ணிக்கையான புகையிரதப் பெட்டி கூரை மின்விசிறிகளைக் கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தயாரிப்பாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார். தயாரிப்பாளர்கள் தங்களது விலைமனுக்களை நேரடியாக அல்லது அற்றோணித் தத்துவம் அளிக்கப்பட்டவர்களுமான அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் ஊடாகச் சமர்ப்பிக்கலாம்.

2. 2013, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று பி. ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரப்படி) விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும்.

3. இலங்கை ரூபாவில் 2,500 மட்டும் அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணயத்தை மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் 2013, ஒற்றோபர் 30 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணி வரையில் (இலங்கை நேரம்) இலங்கையில் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகளின் தலைமை அலுவலகத்தில் வைத்து, விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறக்கப்படும். விலை கூறுநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமாயிருக்கும்படி கோரப்படுகிறார்கள்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வருபவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும் :-

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்,
இலங்கை புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சியங்களின் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

7. மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சிய திணைக்களம்.
த. பெ. இல. 1347,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2473328
தொலைநகல் : 94(11)2432044
மின் - அஞ்சல் : srs.slr@gmail.com
இணையம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.7084

10-776

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

*பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2014*

*கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2013.11.19 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி.ப. 2.05 மணிக்கு திறக்கப்படும். மனுக்கோரல் விண்ணப்பப்படிவங்களையும், குறித்த விபரங்களையும் அந்தந்த மாகாண நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலும் மற்றும் மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலும் மீளப்பெற முடியாத கொடுப்பனவாக ரூபா 250 ஐச் செலுத்தி 2013.11.18 ஆந் திகதியன்று பி. ப. 12.00 மணிவரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நிலஅளவை அலுவலகம் | விண்ணப்பப் படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| ஊவா மாகாணம் | அம்பாறை | அக்கரைப்பற்று | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (ஊவா மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (அம்பாறை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், பதுளை | அக்கரைப்பற்று | 2014, மே 01 |
| ஊவா மாகாணம் | மொனரா கலை | புத்தள | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (ஊவா மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (மொனராகலை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், பதுளை | புத்தள | 2014, சனவரி 01 |
| ஊவா மாகாணம் | மொனரா கலை | சியம்ப லாண்டுவ | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (ஊவா மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (மொனராகலை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், பதுளை | சியம்ப லாண்டுவ | 2014, சனவரி 01 |
| ஊவா மாகாணம் | பதுளை | பண்டாரவளை | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (ஊவா மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (பதுளை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், பதுளை | பண்டாரவளை | 2014, சனவரி 01 |
| மத்திய மாகாணம் | கண்டி | திகன | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மத்திய மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கண்டி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னொருவ, பேராதெனிய | தெல்தெனிய | 2014, சனவரி 01 |

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நிலஅளவை அலுவலகம் | விண்ணப்பப் படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | கண்டி | யட்டிநுவர (பிம்சவிய) | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மத்திய மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கண்டி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னொருவ, பேராதெனிய | பிலிமத்தலாவ | 2014, சனவரி 01 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | பெல்மடுல்ல | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (இரத்தினபுரி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | பெல்மடுல்ல | 2014, சனவரி 01 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | கலவான | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (இரத்தினபுரி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | கலவான | 2014, சனவரி 01 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | வெலிகெ பொல | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (இரத்தினபுரி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | பல்லேபெத்த | 2014, சனவரி 01 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | குருவிட்ட | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (இரத்தினபுரி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | குருவிட்ட | 2014, சனவரி 01 |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | கேகாலை | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கேகாலை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | கேகாலை | 2014, சனவரி 01 |

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நிலஅளவை அலுவலகம்* | *விண்ணப்பப் படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|---|
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | ருவன்வெல்ல | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கேகாலை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | ருவன்வெல்ல | 2014, சனவரி 01 |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | மாவனல்லை | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கேகாலை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (சப்பிர கமுவ மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | மாவனல்லை | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | களுத்துறை | களுத்துறை | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (களுத்துறை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | களுத்துறை | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | களுத்துறை | மதுகம | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (களுத்துறை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | மதுகம | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | களுத்துறை | களுத்துறை பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (களுத்துறை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | களுத்துறை | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | களுத்துறை | பாணந்துறை பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (களுத்துறை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | பாணந்துறை | 2014, சனவரி 01 |

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நிலஅளவை அலுவலகம் | விண்ணபப்ப் படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கம்பஹா | ஜா-எல - வத்தளை பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கம்பஹா) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | ஜா-எல | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | கம்பஹா | கட்டான - நீர்கொழும்பு பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கம்பஹா) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | கட்டான | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | கம்பஹா | அத்தனகல்ல பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கம்பஹா) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | நிட்டம்புவ | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | கம்பஹா | மஹர-களனி பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கம்பஹா) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | வெலிவேரிய-மஹர | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | கம்பஹா | மீரிகம- பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கம்பஹா) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | மீரிகம | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | கம்பஹா | ஜா-எல | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கம்பஹா) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | ஜா-எல | 2014, சனவரி 01 |

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நிலஅளவை அலுவலகம்* | *விண்ணப்பப் படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | கொழும்பு | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கொழும்பு) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | நுகேகொடை | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | கொழும்பு | ஹோமாகம-1 (பிம்சவிய) | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கொழும்பு) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | ஹோமாகம | 2014, சனவரி 01 |
| மேல் மாகாணம் | கொழும்பு | கெஸ்பேவ-1 (பிம்சவிய) | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கொழும்பு) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 05 | கெஸ்பேவ | 2014, சனவரி 01 |
| தென் மாகாணம் | மாத்தறை | கம்புறுபிட்டிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (தென் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (மாத்தறை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், காலி | கம்புறுபிட்டிய | 2014, சனவரி 01 |
| தென் மாகாணம் | மாத்தறை | மாத்தறை பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (தென் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (மாத்தறை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், காலி | மாத்தறை | 2014, ஏப்பிறல் 20 |
| தென் மாகாணம் | காலி | காலி | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (தென் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (காலி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், காலி | கலேகான | 2014, சனவரி 01 |
| தென் மாகாணம் | காலி | ஹிக்கடுவ | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (தென் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (காலி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், காலி | ஹிக்கடுவ | 2014, ஏப்பிறல் 01 |

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நிலஅளவை அலுவலகம் | விண்ணப்பப் படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| தென் மாகாணம் | காலி | காலி-பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (தென் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (காலி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், காலி | கராபிட்டிய | 2014, ஏப்பிறல் 01 |
| தென் மாகாணம் | காலி | உடுகம | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (தென் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (காலி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், காலி | உடுகம | 2013, நவெம்பர் 01 |
| தென் மாகாணம் | காலி | விசேட நிலஅளவை அலுவலகம் | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (தென் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (காலி) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், காலி | காலி | 2014, பெப்புருவரி 16 |
| தென் மாகாணம் | ஹம்பாந்-தோட்டை | ஹம்பாந்-தோட்டை பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (தென் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (ஹம்பாந்தோட்டை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், காலி | ஹம்பாந் தோட்டை | 2014, சனவரி 01 |
| வட மாகாணம் | வவுனியா | வவுனியா | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (வட மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (வவுனியா) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், வவுனியா | வவுனியா | 2014, சனவரி 01 |
| வடமத்திய மாகாணம் | பொலன்-னறுவை | ஹிங்குரான்-கொட | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (வட மத்திய மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (பொலன்னறுவை) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (வடமத்திய மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், அநுராதபுரம் | ஹிங்குரான் கொட | 2014, சனவரி 01 |
| வடமேல் மாகாணம் | குருநாகலை | மல்லவபிட்டிய பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (வடமேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (குருநாகல்) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (வடமேல் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், குருநாகல் | மல்லவபிட்டிய | 2014, சனவரி 01 |

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நிலஅளவை அலுவலகம்* | *விண்ணப்பப் படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|---|
| வடமேல் மாகாணம் | குருநாகல் | குருநாகலை பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (வடமேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (குருநாகல்) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (வடமேல் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், குருநாகல் | குருநாகல் | 2014, சனவரி 01 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | பன்னலை பிம்சவிய | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (வடமேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (குருநாகல்) | மாகாண நில அளவை யாளர் நாயகம் (வடமேல் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், குருநாகல் | பன்னலை | 2014, சனவரி 01 |

முத்திரையிடப்பட்ட தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல்" - (இடத்தின் பெயர்) எனக் குறிப்பிட்டு 2013.11.19 ஆந் திகதியன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 05.

10-807

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இளவாலை, கடுத்தலானை ஒழுங்கையில் வசிக்கும் இராஜரட்னம் கிறேசியன் விஜயரட்னமும் எனது மனைவி மேரி கிளாறா பிரியதர்சினி சவரிமுத்துவுமாகிய நாங்கள் நொத்தாரிசு இ. த. அன்ரன் பாலசிங்கம் முகதாவில் 2013.06.18 ஆந் திகதிய 3997 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் எங்களால் எமது அற்றோணி தத்துவ காரராக நியமிக்கப்பட்ட அதிரியாம்பிள்ளை பீற்றர் ஜெயராசாவின் நியமனத்தை இரத்துச்செய்துள்ளோமென்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

இராஜரட்னம் கிறேசியன் விஜயரட்னம்,
மேரி கிளாறா பிரியதர்சினி சவரிமுத்து.

10-652

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சென்னை, ஆழ்வார்பேட்டை, முரே. கேற் வீதி, 11 ஆம் இலக்கத்தி லுள்ளதும் 1956 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்டதுமான வா டெக் வாபெக் லிமிட்டெட் ஆகிய நாங்கள் இந்திய-ஜெர்மன் வர்த்தக சம்மேளன சென்னை அலுவலக சட்டபூர்வமாக அத்தாட்சிபெற்ற கையொப்பதாரர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, புதுடில்லியிலுள்ள இலங்கை தூதுவராலயத்தினால் சான்றுபடுத் தப்பட்டு 2011, திசெம்பர் 5 ஆந் திகதியிடப்பட்டு சர்வதேச வர்த்தக கம்பனித் தொகுதியின் தலைவரான திரு. எஸ். கே. ஜெயிஸ்வால்ன் மகனும் சுமார் 2 வயதை உடையவரும் (செல்லுபடியாகும் தன்மையிலுள்ள ஈ 4057595 ஆம் இலக்கமுடையதும் 2011, யூலை 19 ஆந் திகதியிடப் பட்டதும் 2021, யூலை 19 ஆந் திகதி வரை செல்லுபடியாகும் தன்மை யிலுள்ளதுமான திரு. எஸ். கே. ஜெயில்வால் அவர்களின் கடவுச்சீட்டு) அவுஸ்திரேலிய பிரசையுமான திரு. ராஹுல் ஜெயிஸ்வால் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இன்று முதல் செயல்வலு பெறும் வகையில் நாம் இரத்துச் செய்துள்ளோம் என இத்தால் அறிவிக்கின்றோம். எமது சார்பாக மேற்கூறப்பட்ட ராஹுல் ஜெயிஸ் வாலினால் மேற்கொள்ளப்படும் கையொப்பமிடும் எவ்வித பிணையம் அல்லது உறுதி ஆகியன இன்று முதல் செல்லுபடியாகாது.

வா டெக் வாபெக் லிமிட்டெட் இற்காக,

ராஜிவ் மிற்றல்,
முகாமைத்துவப் பணிப்பாளர்.

10-650

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கமைய பின்வரும் கம்பனி 2013, செத்தெம்பர் 10 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : யுபர்ன புறொஜெக்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 94485
*பதிவு முகவரி* : இல. 66/5, கிறீன்பாத், கொழும்பு 3

காவஸ்ட் பிசினெஸ் கன்சல்டன்ட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 159/4, பமுனுவில,
கோனவல (வெ. பு.).

10-657

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : இமத்திரா லங்கா ஏற்றுமதிகள் (தனியார் நிறுவனம்)
*பதிவு இலக்கம்* : பீவீ 91528
*ஒருங்கிணைக்கப்பட்ட திகதி* : 14.03.2013
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 270/சீ14ஏ, டிக்லேன்ட் வத்தை, ஒகன்தர வீதி, தலவத்துகொடை

கம்பனி செயலாளர்.

10-645

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் மட்டுப்படுத்தப்பட்டதும் கூட்டிணைக்கப்பட்டதும் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ப்ரோ ஆர்யன்ஸ் பில்ம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 94690
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 24.09.2013
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம்* : இல. 18, டெம்பல் வீதி, நாவலை, இலங்கை

கே. ஏ. வீ. என். குருப்பு ஆராச்சி,
கம்பனி செயலாளர்.

10-649

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : சுழம்பு சயன்ஸ் அன்ட் டெக்னொலொஜி செல்
*கம்பனியின் இலக்கம்* : ஜீஏ 2862
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்*: விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம், இல. 94, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு 3

கம்பனி செயலாளர்.

10-661

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : றொக்ஸ் பெஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 77697
*கூட்டிணைப்புத் திகதி* : 2011.03.11
*பதிவு முகவரி* : இல. 543/3, பேராதெனிய வீதி, கண்டி

செயலாளர்.

10-826

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஓபல் என்ஜினியரிங் பார்ட்னர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 92723
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.05.27
*பதிவு முகவரி* : இல. 12, பேதிரிஸ் வீதி, கொழும்பு 3

கழம்பு கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பீவீரீ) எல்ரீடீ,
செயலாளர்கள்.

10-704

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : சவுத் ஏஷியன் சென்டர் போ லீகல் ஸ்டடீஸ் (கரண்ட்டி) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : ஜீஎல் 2251
*கூட்டிணைப்புத் திகதி* : 18.06.2013
*பதிவு முகவரி* : இல. 07பி, கொலேஜ் அவெனியூ, கல்கிசை

கழம்பு கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பீவீரீ) எல்ரீடீ,
செயலாளர்கள்.

10-703

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பொலன்னறுவை ஹய்-டெக் டயரி பாம் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 94549
பதிவு முகவரி : இல. 47, அலெக்ஸாண்ரா பிளேஸ், கொழும்பு 07
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 17.09.2013

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

10-627

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : இநவ்டெக் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 94173
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2013, ஓகத்து 27
அலுவலக முகவரி : இல. 04, ரிதி மாவத்தை, கலுமுல்ல, களுத்துறை

கம்பனி செயலாளர்.

10-688

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கணேமுல்ல, அம்பஹேன, இல. 112 எனும் இடத்தில் மற்றும் தற்போது இத்தாலி, மிலானோ, இல. 22/எப்94, சீஏஜீ 20148, ரிசியாரெல்லி இல் வசிக்கும் கத்தொட்ட ராலலாகே வந்திமா பிரியதர்ஷனி மென்டிஸ் ஆகிய நான், இலங்கையில் பிரசித்திபெற்ற நொத்தாரிசுகளில் ஒருவரான தமரா அபேரத்ன அவர்களினூடாக 2009.08.12 ஆந் திகதியில் எழுதி பதிவுசெய்யப்பட்ட 880 என்னும் இலக்க விசேட அற்றோணிப் பத்திரத்தில் கணேமுல்ல, தெற்கு கலஹிட்டியாவ, இல. 308/எப் எனும் இடத்தில் வசிக்கும் (தே. அ. அ. இல. : 672624142 ஏ) உரிய கமநாயக்ககே தொன் நிஹால் அருணஷாந்த என்பவருக்கு அங்கீகார அதிகாரத்தை கொடுத்த அற்றோணிப் பத்திரத்தை இன்று முதல் செல்லுபடியற்ற தாக்கிக்கொள்கிறேன் என்பதை இப்பத்திரத்தின் மூலம் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

கே. ஆர். வந்திமா பிரியதர்ஷனி.

2013, செத்தெம்பர் 10.

10-716

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தலை இத்தால் தருகிறோம் :-

கம்பனியின் பெயர் : வுட்க்ரய்ன்ட டிம்பர் க்ராப்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 94811
பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி : இல. 25, ரவ். எஸ். மஹின்ட்ர மாவத்தை, இரத்மலானை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2013, ஒற்றோபர் 02

சபையின் கட்டளைப்படி,

பிசினெஸ் சொலுஷன்ஸ்
அன்ட் செக்கிரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

10-783

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் சட்டவாக்கக் கோவையின் பிரகாரம் கீழ்குறிப்பிடப்படும் கம்பனியானது 2013, யூலை 19 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப் பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : அல் புட்டெம் லொஜஸ்டின் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட இலக்கம் : பீவீ 93678
பதிவுசெய்த முகவரி : இல. 185, யூனியன் பிளேஸ், கொழும்பு 2

கம்பனி செயலாளர்.

10-698

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மஹரகம, நாவின்ன, ஹைலெவல் வீதி, 443/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த டொன் சாந்தி அமென்திரா ஆகிய நான், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சேரசிங்க பத்திரணகே திருபா லக்மாலி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 111 ஆம் இலக்கத்தையும் 2013, ஏப்பிறல் 17 ஆந் திகதியுடையதும் 119 ஆம் தொகுதியிலும் 15 ஆம் பக்கத்திலும் பதிவுசெய்யப்பட்டு கொழும்பு மாவட்டத்தில் மஹரகம, நாவின்ன, ஹைலெவல் வீதி, 443/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கிரிஷாந்தி லக்மாலி லொக்குகே என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்து மற்றும் இல்லாதொழித் துள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

டொன் சாந்தி அமென்திரா.

10-787

## கம்பனியின் இறுதிப் பொதுக் கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

பொலிபக் சீஈஜ மார்கட்டிங் லிமிட்டெட்
(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)

கம்பனியின் பதிவு இல. பீபி 678

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் சரத்துக்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2013 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29 ஆந் திகதி பி. ப. 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 2 இல் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல் பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அ-து,

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது,
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை, மற்றும்
3. இவை பற்றிய விளக்கம் அளித்தல்

பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம மற்றும்
ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்,
பொலிபக் சீஈஜ மார்கட்டிங் லிமிட்டெட்.

2013, ஐப்பசி 10.

10-794

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

ருவன்வல்ல, அம்பகல, ஹட்டகொட, தெமட்டவத்த வளவ்வ என்ற முகவரியைச் சேர்ந்தவரும் தற்போது கனடா, கேயு 5139, ஒன்ராரியோ, ஒட்டாவா, லவரென்ட்ரை ட்ரைவ், 578 ஆம் இலக்கத்தைச் சார்ந்தவருமாகிய நான் பின்வரும் இரண்டு அற்றோணித் தத்துவங்களை இத்தால் இரத்துச்செய்து மற்றும் இல்லாதொழிக்கின்றேன்.

நாவின்ன, விஜேராம ஒழுங்கை, இல. 54/6 என்ற முகவரியையும் 643322862V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையுமுடைய ஜயசிங்க கங்கானம்கே நாவுன் பிரியங்க ஜயசிங்க என்பவரை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பெயர் கொடுத்து மற்றும் நியமித்தல்,

1. பரிஸ்டர், சொலிசிடர் மற்றும் நொத்தாரிசு பிலிப் ஹண்ட் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.09.17 ஆந் திகதியுடையதும் 107/28 ஆம் இலக்க தொகுதி/பக்கத்தையும் 7502 ஆம் இலக்கமுடைய நாட்புத்தகத்திலும் 2012.10.24 ஆந் திகதி பதிவுபெற்றதுமான விசேட அற்றோணித் தத்துவம்,
2. பரிஸ்டர், சொலிசிட்டர் மற்றும் நொத்தாரிசு பிலிப் ஹண்ட் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.09.17 ஆந் திகதியுடையதும் 107/33 ஆம் இலக்க தொகுதி/பக்கத்தையும் 7520 ஆம் இலக்க நாட்புத்தகத்திலும் 2012.10.25 ஆந் திகதி பதிவுபெற்றதுமான விசேட அற்றோணித் தத்துவம்.

எனது சார்பாக குறிப்பிடப்பட்டுள்ள அற்றோணித் தத்துவத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகள், செய்கைகள் அல்லது செயற்பாடுகளுக்கு இத்திகதியிலிருந்து நான் பொறுப்பேற்க மாட்டேன் என அனைவருக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

ஜினதாச சமரதுங்க.

10-817

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது:-

| கம்பனியின் பெயர் | கூட்டிணைப்பின் இலக்கம் | பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் |
|---|---|---|
| (1) அன்னன் புட்ஸ் (பீவீரீ) | பீவீ 92572 | இல. 75/1, கோதமி வீதி, ராஜகிரிய, கொழும்பு 8 |
| (2) ஓவியா இன்டர்-நஷனல் (பீவீரீ) | பீவீ 93698 | தளகொடுவ கார்டன்ஸ், இல. 4/22ஏ, விஜய குமாரதுங்க மாவத்தை, கொழும்பு 5 |
| (3) ஆர்கோ டிசைன் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 70425 | இல. 36, கொட்டாவ, 1 ஆவது லேன், அம்புல்தெனிய, நுகேகொடை |
| (4) இசட். ஆர். என். ஓல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 89699 | இல. 1ஏ, மெயின் வீதி, பெரிய நீலாவணை, மருதமுனை |

எம். சீ. எம். நவாஸ்,
கம்பனி செயலாளர்.

10-805

# ஏல விற்பனைகள்

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – நிட்டம்புவை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை**

**ஜா-எல பிரதேச சபை, கந்தானை உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஹப்புகொட கிராமத்தில் அமைந்துள்ள கெட கெலகஹவத்தை எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். பி. ஜயசேகர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 15.10.2007 ஆந் திகதிய 15309 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் எக்ஸ் எனும் காணித்துண்டும் மற்றும் இரு மாடிக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 14 பேர்ச்சஸ்)**

**ஏலவிற்பனை**

*(இவ்வாதனம் தெலியன் கந்துர லியனகே உபாலி உதய என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- கந்தானை நகரத்திலிருந்து கனேமுல்லை பாதையில் சுமார் 400 மீற்றர் ஜயசூரிய மாவத்தை வரை வந்து வலது பக்கம் திரும்பி அந்த மாவத்தையில் சுமார் 500 மீற்றர் தூரம் வரை சென்றதும் பாதையின் வலதுபக்கம் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 13.11.2013 ஆந் திகதி மு. ப. 11.45 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 14.06.2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 06.09.2013 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', ''லக்பிம'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏல விற்பனையாளரிடம் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும் தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- ''உதவி பொது முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. : 479, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10'' உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836, 011-2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏலவிற்பனையாளர்.

இல. : 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974,
071-8446374, 077-7761706.

10-669

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – நிட்டம்புவ கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை**

**கம்பஹா நகர சபை, எல்லைக்குட்பட்ட கம்பஹா மெதவல கிராமத்தில் அமைந்துள்ள கெட்டவெல கும்புர எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். பி. ஜயசேகர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 22.08.2010 ஆந் திகதிய 10931ஏ ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட 2ஏ1 மற்றும் லொட் 2எ2 எனும் இரு காணித்துண்டு மற்றும் மாடிக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 15.1 பேர்ச்சஸ்)**

**(லொட் 2ஏ1- 14.65 பேர்ச்சஸ், லொட் 2ஏ2 - 00.45 பேர்ச்சஸ்)**

**ஏலவிற்பனை**

*(இவ்வாதனம் தெலியன் கந்துர லியனகே உபாலி உதய என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- கம்பஹா நகரத்திலிருந்து ஜா-எல பஸ் நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள வீர ஒழுங்கைக்கு வந்து சுமார் 150 மீற்றர் வரை வந்ததும் இந்த ஒழுங்கையின் வலது பக்கம் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 13.11.2013 ஆந் திகதி மு. ப. 10.45 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *14.06.2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 02.09.2013 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏல விற்பனையாளரிடம் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-*

*(1) கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்கு பத்து) ;*
*(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;*
*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை) ;*
*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*
*(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 ;*
*(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூ. 2,000.*

*கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும் தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- *"உதவி பொது முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. : 479, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836, 011-2661826.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக*
*வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற*
*ஏலவிற்பனையாளர்.*

*இல. : 369/1, துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல பாதை,*
*மாவில்மட,*
*கண்டி.*
*தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.*

*10-668*

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

***(1) பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, ராகம பற்று, வத்தளை-மாபோலை நகரசபை எல்லைகளுக்குள், வத்தளையில் அமைந்துள்ளதும் ஹேகித்தை, 3 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பு இல. 36/6சீ ஐக் கொண்டதும் "கெந்தகேவத்தை மற்றும் போலந்தபத்திரகே வத்தை மற்றும் கும்புற" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் காமினி பி. தொடன் வெல அவர்களால் தயாரிக்கப்பட்டு 2010, ஒகத்து 16 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 8030 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப் பட்ட காணியினது)***

***கொழும்பு காணிப்பதிவகத்தில் தலைப்பு பி. 918/273 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது ;***

***(காணியின் விஸ்தீரணம் : இருபத்தெட்டு தசம் ஐந்து ஒன்பது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 28.59பே.) மேலும் திருத்தமாக இருபத் தொன்பது தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 29.95பே.)***

***உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சமரவிக்கிரம அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999, செத்தெம்பர் 05 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 189/1999 இல் துண்டு 1ஏ இன் வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து.***

**ஏலவிற்பனை**

*(மெக்னட் ஸ்ரீல் எனும் பெயர் வடிவிலான நிறுவனத்தின்கீழ் பங்குதாரர்களாக வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் கடப்பாடுடைய வரான பெரியசாமி ரமேஷ் மற்றும் ஈடுவைத்தவர் கடப்பாடுடையவரான சுப்பையா ரமேஷ் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவாதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2012, சனவரி 27 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 2291 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- *கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வீதி வழியே வத்தளை வரை சென்று ஹேக்கித்தை வீதிக்கு இடப்பக்கம் திரும்பி, ஏறக்குறைய 150 மீற்றர் சென்று, 3 ஆவது ஒழுங்கைக்கு வலப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 25 மீற்றர் சென்று, வீதிக்கு உட்புகுவழியை நோக்கியுள்ள இவ்வாதனத்தை அடைவதற்கு 12 அகல வீதி ஒதுக்கிற்கு மீண்டும் வலப்பக்கம் திரும்பவும்.*

*பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனங்களை முறையே 2013, நவெம்பர் 22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.*

***தீர்மான அறிவித்தலுக்கு.***- *2013.10.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், அதே திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- *பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;*
*(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;*
*(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/ 2% (இரண்டரை வீதம் ) ;*
*(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;*
*(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,500 ;*
*(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணங்கள்.*

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., சிரேட்ட முகாமையாளர் - சட்ட சம்பந்தமானது'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 011-4667229, 011-4667237, 011-4667230, 011-2565573.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் பட்டய ஏலதாரர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 077-7672082.
தொலைநகல் இல. : 2871184.

10-803

---

### யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

***1332 ஆம் இலக்க அடிப்படை பிணை உறுதி மற்றும் 1552 ஆம் இலக்க இரண்டாம்நிலை பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரதேசத்திற்கு உட்பட்ட, அலுத்குரு கோரளே, தாசிய பற்று, கட்டு நாயக்க-சீதுவ நகரசபை எல்லைகளுக்கு உட்பட்ட கட்டுநாயக்க-குறணயில் அமைந்துள்ள "பம்பிகஹவத்த எனவும் மதங்கஹவத்த" எனவும் அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவை யாளர் எம். டீ. ஜே. வீ. பெரேரா அவர்களால் வரையப்பட்ட 1980 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதியிடப்பட்ட 5574 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக**

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 7பே.)***

***மேலே குறிப்பிடப்பட்ட கட்டுநாயக்க-குறணயில் அமைந்துள்ள பம்பிகஹவத்த எனவும் மதங்கஹவத்த எனவும் அழைக்கப்படும் காணி அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. ஆர். பத்மசிரி அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட 286 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ எனக் குறிப்பிடப்பட்டுள்ள மீள் அளவை செய்யப்பட்ட காணித்துண்டு அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 02.50பே.)***

*(நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. ஏ. எல். பீ. தம்மிக சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 6 ஆந் திகதியிடப்பட்ட 1332 ஆம் இலக்க அடிப்படைப் பிணை உறுதி மற்றும் 2011, செத்தெம்பர் மாதம் 2 ஆந் திகதியிடப்பட்ட 1552 ஆம் இலக்க இரண்டாம் நிலை பிணை உறுதிகள் மூலம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டுநாயக்க-குறண எஸ். எல். ஏ. எப். வீதி, இல. 321 எனும் இடத்தில் அமைந்துள்ள இல. பீவீ 16235 எனப் பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட அல்பாடெக் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் (இதன் பின்னர் 'அடைமானம் பெறுநர்' என அழைக்கப்படும்) இனால் யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இற்கு அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இனால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 25% (இருபத்தைந்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு வீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம் ) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கானநொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,000 ;

கொள்முதல் விலையின் மிகுதி 75 சதவீதம் விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2374100 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இன் சட்டப் பிரிவுடன் அல்லது யூனியன் பாங்க் ஒப் பீஎல்சீ, வென்னப்புவை கிளைக்கு 031-225343/4 உடன் தொடர்புகொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏல விற்பனையாளர்,
121 வருட கால சேவை அனுபவம்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

10-799

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – ஹோமாகம கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுதல் 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இதன்கீழ் விபரிக்கப்பட்ட காணி என்னால் 2013, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

### காணிகள் ஏல விற்பனை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து, ஏலகம கோரளையில் ஹோமாகம பிரதேச சபை எல்லையில் ஹோமாகம கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் கே. எம். ஏ. எச். பண்டாரவின் 2007.05.11 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2653 இல் காண்பிக்கப்பட்ட லொட் 31 என்ற காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து.இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 39.1பே.)**

*மேற்படி காணியை கடன் எடுத்த லியனகே சுகத் புஸ்பகுமார மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2013.06.14 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2013.10.25 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2013.10.28 ஆந் திகதியுடைய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- கொழும்பில் இருந்து 15 மைல் தூரம் சென்று ஹோமாகம சந்தியை அடைந்து இடதுபக்கம் திரும்பி ரயில் ஸ்டேஷனில் இருந்து 1/3 தூரம் அதுருகிரிய றோட்டில் சென்று ஒரு மைல் கடந்து வலதுபக்கம் வேகந்த றோட்டில் ஹபரகட சென்று வேகந்த றோட்டில் 275 யார் சென்ற பிறகு நாவிமண றோட்டில் 500 மீட்டர் தூரம் சென்று காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது ஹோமாகம கிளையில் செலுத்த வேண்டும்.

*வேறு விபரங்களுக்காக.*- ''முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 100, ஹைலெவல் றோட், ஹோமாகம'' என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 011-2895128-9 ; தொலைநகல் இல. : 011-2895127.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. : 011-2445393.

10-796

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.